


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 01.12.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்















## தமிழக நிகழ்வுகள்

- **12ம்** நூற்றாண்டைச் சேர்ந்த **விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில், பெண்ணை வடகரை மேற்கோவலூர் நாட்டு இலச்சியமுடையான் உழியன் மாதன்** என்பவர் சோழாந்தகப் பல்லவராயன் வடுகன் ஆளவந்தான் நினைவாக, அமைக்கப்பட்ட தூம்பானது, **திருவண்ணாமலை அருகே தென்முடியனூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

- **தமிழகத்தில் ஏழை, எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைப்பதற்காக**, கடந்த 2012ம் ஆண்டு ஜனவரி 11ம் தேதி தொடங்கப்பட்ட முதல்வரின் விரைவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட அரசு **மருத்துவக் காப்பீட்டுத் தொகை 2 லட்சத்திலிருந்து 5 லட்சமாக** உயர்த்தப்பட்டுள்ளது.
    - இதன்மூலம், கூடுதலாக 254 வகை சிகிச்சைகளை மக்கள் எளிதாக பெறமுடியும்.

## இந்திய நிகழ்வுகள்

- **நீடித்த கண்காணிப்பு, தீவிர ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு** ஆகியவற்றின் மூலம் வானிலை மற்றும் காலநிலை முன்னறிவிப்பு திறன்களை மேம்படுத்துவதே நோக்கமாகக் கொண்ட, **2017 – 2020 கால கட்டங்களில்** 'வளிமண்டலம் மற்றும் காலநிலை குறித்த ஆராய்ச்சி – மாதிரியாக்க கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சேவைகள்" **(Atmosphere & Climate Research – Modeling Observing Systems & Services – ACROSS)** என்ற திட்டத்தின் கீழ் **9 துணைத் திட்டங்களை** தொடர்வதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான **அமைச்சரவை ஒப்புதல்** அளித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- உலகின் முதலாவது **நிலத்தடி நீர்மட்டத்திற்கு கீழ் அமைந்த ஆடம்பர தங்கும் விடுதியான இண்டர்கான்டினென்டல்** ஷாங்காய் வொண்டர்லேண்ட் விடுதியானது சீனாவின் ஷாங்காய் மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் **சாங்கியாங் மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது.**

- ஐ.நா.வின் சர்வதேச குழந்தைகளுக்கான அவசர நிதியமானது **(UNICEF – United Nations International Children's Emergency Fund) குழந்தைகளின் உரிமைகளுக்காக போராட** வடகிழக்குப் பிராந்தியத்திற்காக முதல் இளைஞர் பரப்புனராக **அசாம் பிரபல பாடகியான நஹீத் அப்ரின் என்பவரை நியமித்துள்ளது**.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **தீனதயாள் அந்த்யோதயா திட்டம்** - தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் **(DAY – NULM/Deendayal Antyodaya Yojana. National Urban Livelihoods Mission)** கடன்களை விரைவாக செயலாக்கம் செய்வதற்காக, வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகமானது, மலிவான கடன் வசதி மற்றும் வட்டி உதவித் தொகை அணுகலுக்காக **(PAiSA) பைசா என்ற மின்னணு தளத்தை** புது டெல்லியில் நடைபெற்ற மாநகராட்சி நிதி மற்றும் நகர்புற திட்டமிடல் மீதான தேசிய பட்டறையின் போது தொடங்கப்பட்டது.
  - **PAiSA – Portal for Affordable Credit and Interest Subvention Access**

## நியமனங்கள்

- மத்திய நேரடி வரிகளுக்கான ஆணையத்தின் உறுப்பினரான **அகிலேஷ் ரஞ்சனை** புதிய **நேரடி வரிச் சட்டத்தை வரைவு செய்யும் பணிக்குழுவின் தலைவராக மத்திய அமைச்சகம் நியமித்துள்ளது**. இவர் அரவிந்த் மோடிக்கும் பதிலாக பதவியேற்க உள்ளார்.
  - இப்பணிக் குழுவானது, 1961-ன் வருமான வரிச் சட்டத்தை, மதிப்பாய்வு செய்யும் நாட்டின் பொருளாதார தேவைகளுடன் ஒத்திசையக் கூடிய புதிய நேர்முக வரிச் சட்டத்தை வரைவு செய்வதற்காக நவம்பர் 2017ல் அமைக்கப்பட்டது.

## பொருளாதார நிகழ்வுகள்

- சர்வதேச சந்தையில் **பெட்ரோலிய கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு, உள்ளீட்டு செலவு அதிகரிப்பு, டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு குறைவு** போன்ற காரணங்களால், இந்திய நாட்டின்


We Shine Academy TM

மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது பொருளாதார வளர்ச்சி **நடப்பு நிதியாண்டில்** (2018-19) 2-வது காலாண்டில் **7.1 சதவீதமாக குறைந்துள்ளது** என மத்திய அரசு அறிவித்துள்ளது.

We Shine Academy™